அவசரம் / உடனடி நடவடிக்கைக்கு

/பதிவுத்துறை/

அனுப்புநர்
பதிவுதுறைத்தலைவர்,
பதிவுதுறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை-28.

பெறுநர்
1. அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள்.
2. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள். (நிர்வாகம் & தணிக்கை)
3. அனைத்து சார்பதிவாளர்கள்.

ந.க.எண்.15406/சி1/2024, நாள்.27.02.2025

ஐயா/அம்மையீர்,

பொருள்: பதிவுத்துறை – அரசின் வருவாய் பெருக்கும் நோக்கில் மார்ச் 2025 மாதத்தின் அனைத்து சனிக்கிழமைகளிலும் பதிவு அலுவலகங்களை செயல்பாட்டில் வைத்திருக்குமாறு தெரிவித்தல்.

பார்வை : பதிவுத்துறை தலைவர் கடித எண்.7531/சி1/2022, நாள்.02.03.2022

******

பொது மக்களிடமிருந்து வரப்பெற்றுள்ள கோரிக்கைகளின் அடிப்படையிலும், அரசின் வருவாய் பெருக்கும் நோக்கிலும் மார்ச் 2025 மாதத்தின் அனைத்து சனிக்கிழமைகளிலும் ஆவண பதிவினை ஏற்பதற்கு ஏதுவாக தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்து பதிவு அலுவலகங்களும் வழக்கம்போல் காலை 10.00 மணி முதல் ஆவண பதிவு முடியும் வரை செயல்பாட்டில் வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. மேற்குறிப்பிடும் விடுமுறை நாளில் மேற்கொள்ளப்படும் ஆவணப் பதிவுகளுக்கு பதிவு விதி-4-க்கு உட்பட்டு பதிவுச் சட்டம் கீழுள்ள Table of fees இனம் 17(3)-ன் a,b,c -ல் கூறப்பட்டவாறு விடுமுறை நாள் ஆவணப் பதிவிற்கான கட்டணம் சேர்த்து வசூலிக்கப்படவேண்டும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

Verified RealEstate™

3. மேலும் அன்றைய தினங்களில், ஸ்டார் 2.0 திட்டப்படி அனைத்து அலுவலகங்களிலும் பதிவுப் பணி இணையவழி தடையின்றி நடைபெற ஏதுவாக பொதுமக்களுக்கு முன் பதிவு செய்திடும் வசதி மற்றும் அலுவலக பணியாளர்கள் பொதுமக்களுக்கான Help Desk மற்றும் Help Line வசதி ஆகியவற்றினை எவ்வித குறைபாட்டுக்கும் இடமின்றி உடன் ஏற்படுத்திட M/s TCS மென்பொறியாளர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

4. துணை பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட பதிவாளர்கள், தங்கள் எல்லைக்குட்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுவதை கண்காணிக்கவும் கோரப்படுகிறார்கள்.

ஒம்/-27.02.2025
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

27/2
மாவட்டப்பதிவாளர் (ஆய்வு)

27/2/25

நகல்:

1. அனைத்து உயர் அலுவலர்கள்,
   பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்.
2. பதிவுத்துறைத்தலைவரின் நேர்முக எழுத்தர்,
3. அரசு செயலாளர்,
   வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை -09.
4. நேர்முக உதவியாளர் (தனி),
   மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள்.
   தகவலுக்காக அனுப்பப்படுகிறது
5. முக்கிய ஆணைக் கோப்பு.
6. கணினி பிரிவு.

Verified RealEstate TM